DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973 and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE NO.I,MANNARGUDI**

**ST.C.No. 1176/2022 P.W. 1 பாலன் த/பெ.சுந்தரம்**

நாள் 21.11.2025

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

28.12.2020 ம் தேதியிட்டு எதிரிக்கொடுத்ததாக சொல்லப்படும் காசோலைக்குரிய தொகையை எதிரி திரும்ப கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. தஞ்சாவூர் நான் ஏற்கெனவே குடியிருந்தவாடகை வீட்டில் தற்போது நான் குடியிருக்கிறேனா என்றால் இல்லை. நான் வாடகை வீட்டில் இருந்து கடந்த 5 வருடங்களுக்கு முன்பு வடுவூருக்கு வந்துவிட்டேன் என்று குறுக்கு விசாரணையில் சொல்லியுள்ளேன். அதற்கு முன்பே தஞ்சாவூரில் குடியிருந்த வாடகை வீட்டை காலி செய்து விட்னே் என்றால் சரிதான்.

எதிரியின் மனைவி பெயரில் தஞ்சாவூர் விரைவு நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் STC.No.5/2023 என்ற வழக்கில் நான தாக்கல் செய்துள்ள புகாரில் வடுவூர் முகவரியை தான் குறிப்பிட்டுள்ளேனா என்றால் ஆமாம். மேற்படிவழக்கில் எதிரியின் மனைவி குமுதாவிற்கு பணம் கொடுத்ததாக சொல்லப்படும் தொகை எதிரிக்கு பணம் கொடுத்ததாக சொல்லப்படுவதற்கு முன்பா? பின்பா என்றால் எதிரிக்கு கொடுத்த தொகைக்கு பின்னர் தான். எதிரியின் மனைவி குமுதாவிற்கு எந்த தேதியில் எப்போது பணம் கொடுத்தேன் என்றால் 09.09. 2022.

நான் பணம் கொடுத்ததாக சொல்லப்படும் தேதியிலே குமுதா காசோலை கொடுத்தாரா என்றால் அன்றே கொடுக்கவில்லை. தஞ்சாவூரில் தாக்கல் செய்துள்ள வழக்கு காசோலையை எந்த தேதியில் குமுதா என்னிடம் கொடுத்தார் என்றால் 16.09.2022. 16.09.2022 ம் தேதியிட்டு எனக்கு கொடுத்ததாக சொல்லப்படும் காசோலையை அதே தேதியில் தான் கொடுத்தாரா என்றால் அதே தேதியில் தான் கொடுத்தார். மேற்படி விபரத்தை நான் தஞ்சாவூரில் தாக்கல் செய்துள்ள வழக்கிலும், வழக்கறிஞர் அறிவிப்பிலும் சொல்லியுள்ளேனா என்றால் சரிதான்.

நான் சொல்வதுபோல் 16.09.2022 தேதியில் காசோலை கொடுக்கவில்லை என்றாலும், தஞ்சாவூர் நீதிமன்றத்தில் அவ்வாறு வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் தான் தஞ்சாவூர் நீதிமன்றத்தில் நான் குமுதாவிற்கு எதிராக தாக்கல் செய்துள்ள புகார் மனு

சான்றிட்ட நகல் என்றால் சரிதான். **மேற்படி ஆவணம் எ.ம.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** நான் சொல்வது போல் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள காசோலை எதிரியால் நான் குறுக்கு விசாரணை சொன்ன தேதியில் கொடுக்கப்பட்டதல்ல என்றால் சரியல்ல.

இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள காசோலை என்னால் முறைக்கேடாக பெறப்பட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரி மாணிக்கத்திற்கு எதிராக தாக்கல செய்துள்ள காசோலையும், தஞ்சாவூர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள காசோலையும் எனக்கு வேண்டிய மூன்றாம் நபர்களிடம் இருந்து பெறப்பட்டு அவர்களுக்க பினாமியாக இருந்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அதனால் தான் நான் புகாரில் சொல்லியுள்ள விவரங்களுக்கு, குறுக்கு விசாரணையில் முன்னுக்கு பின்னாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அதனால் இந்த வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டியது என்றால் சரியல்ல.

Sd/--J. Tamizhmurugan,
Judicial Magistrate No.I,
Mannargudi.